## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஏப்ரல் மாத சாதாரணக்கூட்டம் **10.04.2020–ம்** தேதி கிழமை பிற்பகல் **4.00** மணிக்கு நடைபெற்றது **.**

தனி அலுவலர் / ஆணையாளர்

## பொருள் எண்.1

கொரோனாவால் தொற்று உலகில் சீனாவை தொடர்ந்து 136 நாடுகளில் பரவி உள்ள நிலையில் நமது இந்தியதிருநாட்டிலும், இந்நோயின் தாக்கம் ஏற்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு தீவிர தடுப்பு முன்னெச்சரிக்கைக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில் பத்திரிக்கை செய்தி வாயிலாக 16.03.2020 மற்றும் 19.03.2020-ல் அறிவுரைகள் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, குளச்சல் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் (Covid-19) தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்து எடுக்கப்பட வேண்டி நடவடிக்கைகள் தொடர்பாக ஆணையர் அவர்கள் தலைமையில் உள் மற்றும் வெளிபணியாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் 17.03.2020 அன்று நடத்தப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டது. அதன்படி கொரோனா வைரஸ் முன்னெக்கசரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நகராட்சி சார்பில் பொது மக்கள் அதிகம் கூடும் நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையங்கள் மற்றும் தினசரி சந்தை பொதுமக்கள் கை கழுவுவதற்கு வசதி செய்யப்பட்டது. மேலும் பொது மக்கள் அன்றாடம் கூடும் நகரின் முக்கிய பேருந்து நிலையங்கள், தினசரி சந்தை பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகரின் அனைத்து பகுதிகளிலும் தூய்மை பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு கிருமி நாசினி தெளிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாண்புமிகு பாரதபிரதமர் அவர்களால் 22.03.2020 அன்று ஊரடங்கை கடைபிடிக்க தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சி பகுதிகளில் செயல்படும் மக்கள் கூடும் வணிகவளாகங்கள் (Malls) உடற்பயிற்சி மையங்கள், உயிரியல் பூங்காக்கள் ஆகியவற்றை 31.03.2020 வரை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர வேறு எந்த நிகழ்வுகளும் திருமண மண்டபங்களில் நடத்த கூடாது எனவும், திட்டமிடப்பட்ட நிகழ்வுகளில் குறைந்த அளவில் மக்கள் பங்கேற்கவும் அறிவுறுத்தப்பட்டது. பள்ளி, கல்லூரிகளுக்கும் விடுமுறையிடப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாகி கொண்டிருந்ததின் அடிப்படையில் அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு மாண்புமிகு பாரதபிரதமர் அவர்காளல் 21 நாட்கள் ஊரடங்கு கடைபிடிக்க உத்தரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. துப்புரவு ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை இந்தியா திட்டம் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள், மருத்துவ அலுவலர், நகர் சுகாதார செவிலியர், DBC பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களுடன் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தேவையான பொது சுகாதார தளவாட சாமான்களான சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், கிருமி நாசினிகள், முகவுரை, கையுறை, முழு கவச உறைகள் கொள்முதல் செய்யப்பட்டு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கொரோனா வைரஸ் (Covid-19) தடுப்பு முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு குறித்த நோட்டீஸ்கள், டெங்கு ஒழிப்பு பணியாளர்களால் (DBC) விநியோகித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நகரின் அனைத்து பகுதியிலும் ஒட்டபபட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளவர்கள் கண்டறியப்பட்டால் அவர்களை

தனிமைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நகராட்சி பகுதியில் ஊரடங்கு காலங்களில் தூய்மை பணியாளர்கள், ஆதரவற்ற முதியவர்களுக்கு அம்மா உணவகங்கள் மூலம் உணவுகள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பொது மக்களுக்கு தேவையான அன்றாட சாமான்கள் அரிசி, காய்கறி, மளிகை சாமான்கள், பழவகைகள் மற்றும் மருந்து வகைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

மேலும் கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தீயணைப்புத் துறைக்கு சொந்தமான டேங்கர் லாரிகள் மூலம் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்டுள்ளபடி, முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கும் அதற்கான செலவினம் தொகை ரூ.20,00,000/- ஒப்புதலுக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2241 அங்கீகரிக்கப்பட்டது**

**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஏப்ரல் மாத சாதாரணக்கூட்டம் **30.04.2020–**ம் தேதி கிழமை பிற்பகல் **4.00** மணிக்கு நடைபெற்றது **.**

தனி அலுவலர் / ஆணையாளர்

## பொருள் எண்.1

கொரோனாவால் தொற்று உலகில் சீனாவை தொடர்ந்து 136 நாடுகளில் பரவி உள்ள நிலையில் நமது இந்தியதிருநாட்டிலும், இந்நோயின் தாக்கம் ஏற்பட்ட நிலையில், கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாகி கொண்டிருந்ததின் அடிப்படையில் அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு மாண்புமிகு பாரதபிரதமர் அவர்களால் 24.03.02020 முதல் 13.04.2020 வரை 21 நாட்கள் ஊரடங்கு கடைபிடிக்க உத்தரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. துப்புரவு ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை இந்தியா திட்டம் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள், மருத்துவ அலுவலர், நகர் சுகாதார செவிலியர், DBC பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களுடன் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தேவையான பொது சுகாதார தளவாட சாமான்களான சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், கிருமி நாசினிகள், முகவுரை, கையுறை, முழு கவச உறைகள் கொள்முதல் செய்யப்பட்டு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்று பரவி வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்த 14.04.2020 முதல் 03.05.2020 வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட நிலையில், நகராட்சி பகுதிகளில் நோய் தொற்று பரவாமல் இருக்க தேவையான கிருமி நாசினிகள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படுவதால், அதனை வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.8,00,000/- ஒப்புதலுக்கும், மன்ற அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2242 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில், இந்தியன் வங்கி எதிர்புறம் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில், நோயாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்வதற்கும் போதுமான இடவசதி இல்லாததாலும், கழிவறை வசதி இல்லாமல் உள்ளதாலும், கட்டிடத்தின் தரைதளம் சேதமடைந்துள்ளதாலும், கட்டிடத்தில் அருகில் Shed அமைப்பதற்கும், புதிதாக கழிவறை கட்டுதல் மற்றும் தற்போதுள்ள கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.434/2020/இ1

**தீர்மானம் எண்.2243 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் பொறியாளர் அறை ஆகியவற்றில் உள்ள கழிவறைகளின் சுவர், கதவு ஆகியவை உடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் ஈப்பு நிறுத்துமிடத்தில் shed பழுதடைந்துள்ளதால், வாகனத்தை பாதுகாப்பாக நிறுத்த முடியாமல் உள்ளது. அத்துடன் பேருந்து நிலையத்தில் குடிநீர் குழாய் பழுது நீக்கம் செய்யப்பட்டதில், காங்கிரீட் தளம் உடைந்து குண்டும், குழியுமாக உள்ளது. எனவே மேற்படி பழுதுகளை சரி செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.436/2020/இ1

**தீர்மானம் எண்.2244 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிகுழுக்கள் மூலம் பணியமர்த்த ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2144 நாள் 30.09.2019-ல் ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 DBC பணியாளர்களை ஏப்ரல் 2020 முதல் ஜுன் 2020 வரை 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016 நாள் 11.02.2018-ல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின்படி 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.38,0000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2245 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.5

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் உள்ள பாய்லர் அடுப்பு பழுதடைந்து விட்டதால் 28.04.2020 முதல் கேஸ் அடுப்பு மற்றும் இட்லி குட்டுவம் தினசரி வாடகை நாள் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் செலவு ஆகிறது. பாய்லர் அடுப்பு சரி செய்யும் வரை மேற்படி பொருட்கள் வாடகைக்கு எடுத்து உபகோயப்படுத்த மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2246 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.6

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்டதில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் பெயரில் உள்ள வைப்புத் தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **வருடம்** | **தொகை (ரூ)** |
|---|---|---|---|
| 1. | திரு.M.M.கிளீட்டஸ் | 2005-06 | 15000/- |
| | | 2007-2008 | 1850/-<br>2500/-<br>500/-<br>3000/- |
| | | 2009-2010 | 3000/- |
| | | **மொத்தம்** | **26350/-** |
| 2. | திரு.S.ஜாண்றோஸ் | 2011-12 | 500/- |
| | | 2012-13 | 2500/-<br>1750/-<br>1300/-<br>2000/- |
| | | 2015-16 | 4000/-<br>10000/-<br>14250/-<br>550/-<br>2600/-<br>1200/- |
| | | 2016-17 | 550/-<br>5500/-<br>1700/- |
| | | **மொத்தம்** | **48400/-** |

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு.C.தேவராஜ் | 2015-16 | 10000/-<br>4500/-<br>900/- |
| | | 2016-17 | 28423/-<br>2000/- |
| | | 2017-18 | 8245/- |
| | | **மொத்தம்** | **54,068/-** |

ந.க.எண்.இ1/22/2020

**தீர்மானம் எண்.2247 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் மெயின் ரோடு பகுதியில் பூக்குழி முதல் புல்லன்விளை செல்லும் சாலை வரை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 63 mm pipe line-ல் அடைப்பு ஏற்பட்டுள்ளதால், சீரான குடிநீர் கிடைக்கவில்லை என பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றதை தொடர்ந்து, மேற்படி பகுதியில் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மூன்று இடங்களில் குடிநீர் குழாய் தோண்டி பார்க்கப்பட்டதில், பல வருடங்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்ட குழாய் பழுதடைந்திருப்பதால், பொது மக்களக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது கொரோனா நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னிட்டு, குடிநீர் தேவை அதிகமாகி உள்ளதால், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி பகுதியில் புதிதாக 3”PVC (90mm) குழாய் பதிப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,20,000/-க்கும், மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.439/2020/இ1

**தீர்மானம் எண்.2248 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.8

இந்நகராட்சி உப்பளம் பகுதி உரக்கிடங்கில், ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள குப்பைகளை (தரம் பிரித்து பெறப்படுவதற்கு முன்னர்) உயிரி அகழ்வு (Bio-Mining) முறையில் பிரிப்பதற்கு, 8th PHC-SBM : 2018-19-ன் கீழ் ரூ.146.00 இலட்சம் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நிலையில், சென்னை அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர், நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளரால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில், உரக்கிடங்கு பகுதி பின் நீர் பரப்பாக (Back Water surface) உள்ளதால், உயிரி அகழ்வு முறையில் குப்பைகளை பிரித்தெடுக்க வழிவகை இல்லை (Bio-Moning process is not possible) என தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் திரு.அமல்ராஜ் அவர்களால் உப்பளம் பகுதி உரக்கிடங்கில் நேராய்வு நடத்தப்பட்டதில், ஆங்காங்கே சிதறி கிடக்கும் குப்பைகளை JCB இயந்திரம் மூலம் ஒதுக்கி, அளவு எடுக்கும் வகையில் குவித்து வைக்க (Heeping) தெரிவிக்கப்பட்டது. மேலும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்குதல் பணிக்கு போதுமான இடம் இல்லாமல் உள்ளதால், குப்பைகளை

குவித்து வைப்பதற்கு ஏதுவாக JCB இயந்திரம் மூலம் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,62,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.430-1/2020/இ1

**தீர்மானம் எண்.2249 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-ல் துறைமுகத்தெரு பொழிமுகம் பகுதியில் அமைந்துள்ள க.எண்.14/68-ன் அருகில் உள்ள வடிகால் ஓடை மிகவும் குறுகலாக உள்ளதால், வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கழிவு நீர் சாலையின் மேற்பரப்பில் வழிந்தோடி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தி வருகிறது. எனவே மேற்படி பகுதியில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.433/2020/இ1

**தீர்மானம் எண்.2250 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் குளச்சல்-1 பிரிவு அலுவலகத்தின் கீழ் தளத்தில், மின் கட்டணம் வசூல் செய்யப்படும் இடத்தில், கொரோனா நோய் தொற்று காரணமாக பொது மக்கள் சமூக இடைவெளியை கடை பிடித்து மின் கட்டணம் செலுத்தும் வகையில் நிழல் பந்தல் (Shed) அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.42,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.443/2020/இ1

**தீர்மானம் எண்.2251 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை சமீபம் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் தினசரி சந்தையில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் ஆகியவை மிகவும் மோசமாக பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், மேற்படி கழிப்பிடங்களின் குத்தகைதாரர்களால் கழிப்பிடங்களை சீரமைத்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி கழிவறைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.443-1/2020/இ1

**தீர்மானம் எண்.2252 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.12

குளச்சல் நகராட்சியில் 2020-21 ஆம் ஆண்டிற்கு, புதிய குடிநீர் குழாய் இணைப்பிற்கு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **சிமெண்ட் தளம்** | |
| 0-15m | ரூ.14,211/- |
| 0-30m | ரூ.24,556/- |
| 0-45m | ரூ.35,696/- |
| 0-75m | ரூ.56,545/- |
| 0-90m | ரூ.67,125/- |
| **தார் தளம்** | |
| 0-15m | ரூ.13,894/- |
| 0-30m | ரூ.23,923/- |
| 0-45m | ரூ.34,745/- |
| 0-75m | ரூ.54,035/- |
| 0-90m | ரூ.65,221/- |
| **மண் தளம்** | |
| 0-15m | ரூ.7,302/- |
| 0-30m | ரூ.10,649/- |
| 0-45m | ரூ.14,835/- |
| 0-75m | ரூ.21,778/- |
| 0-90m | ரூ.25,404/- |
| **வணிக பயன்பாடு சிமெண்ட் தளம்** | |
| 0-15m | ரூ.19,211/- |
| 0-30m | ரூ.29,556/- |
| 0-45m | ரூ.40,696/- |
| 0-75m | ரூ.61,545/- |
| 0-90m | ரூ.72,125/- |
| **தார் தளம்** | |
| 0-15m | ரூ.18,894/- |
| 0-30m | ரூ.28,923/- |
| 0-45m | ரூ.39,745/- |
| 0-75m | ரூ.59,035/- |
| 0-90m | ரூ.70,221/- |
| **மண் தளம்** | |
| 0-15m | ரூ.12,302/- |
| 0-30m | ரூ.15,649/- |
| 0-45m | ரூ.19,835/- |

| | |
|---|---|
| 0-75m | ரூ.26,778/- |
| 0-90m | ரூ.30,404/- |
| **தொழிற்சாலை பயன்பாடு சிமெண்ட் தளம்** | |
| 0-15m | ரூ.17,211/- |
| 0-30m | ரூ.27,556/- |
| 0-45m | ரூ.38,696/- |
| 0-75m | ரூ.59,545/- |
| 0-90m | ரூ.70,125/- |
| **தார் தளம்** | |
| 0-15m | ரூ.16,894/- |
| 0-30m | ரூ.26,923/- |
| 0-45m | ரூ.37,745/- |
| 0-75m | ரூ.57,035/- |
| 0-90m | ரூ.68,221/- |
| **மண் தளம்** | |
| 0-15m | ரூ.10,302/- |
| 0-30m | ரூ.13,649/- |
| 0-45m | ரூ.17,835/- |
| 0-75m | ரூ.24,778/- |
| 0-90m | ரூ.28,404/- |

மேலும் குடிநீர் குழாய் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்திட கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. மண் தளம் - ரூ.875.-
2. சிமெண்ட் தளம் - ரூ.1400/-
3. தார் தளம் - ரூ.1350/-

மேலும் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு மற்றும் மறு இணைப்பிற்கான கட்டணம் ரூ.500/- வீதம் வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குடிநீர் குழாய் இணைப்பிற்கான பெயர் மாற்றத்திற்கு ரூ.200/- வீதம் வசூல் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.256/2020/இ2

**தீர்மானம் எண்.2253 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை முதல்தளம் கடை எண்.1, கவியரசு கண்ணதாசன் வணிக வளாக தரைதளம் கடை எண்.12, கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் தரை தளம் கடை எண்.12,13 முதல் தளம் கடை எண்.47 முதல் 52 ஆகிய கடைகளுக்கு மாத வாடகை செலுத்தாத காரணத்தினால் மேற்படி கடைகளுக்கு செலுத்தப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையிலிருந்து மாத வாடகை 18.02.2020-ல் ஈடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | வணிக வளாகத்தின் பெயர் | வாடகைதாரர் பெயர் | ஈடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | **நவீன மீன்சந்தை**<br>முதல் தளம் கடை எண்.1 | T.ராஜகுமார் | 1,64,400/- |
| 2 | **கவியரசு கண்ணதாசன்**<br>தரை தளம் கடை எண்.12 | ரெகுபாலன் | 67,496/- |
| 3 | **கலைஞர் கருணாநிதி**<br>தரை தளம் 12,13<br>முதல் தளம் 47 முதல் 52 வரை | மின்சார வாரியம்<br><br>பெரியசுவாமி | 45,500/-<br><br>1,18,820/- |
| | | **மொத்தம்** | **ரூ.3,96,216/-** |

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2254 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் வார்டு எண்.7-ல் துறைமுகம் பாலம் அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1000/- என இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2200, நாள் 31.01.2020-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்வைப்புத் தொகை குறைவாக உள்ளதால் மேற்படி தீர்மானத்தை ரத்து செய்து, முன்வைப்புத் தொகை ரூ.5000/- என நிர்ணயம் செய்ய மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்.2255 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால், குப்பைகளை பிரித்து உரமாக்குதல் பணிகளுக்கு சிரமம் ஏற்பட்டு வருவதை கருத்தில் கொண்டு, களிமார் பகுதியிலிருந்து உரக்கிடங்கு நுழைவு வாயில் வரை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயை உரக்கிடங்கின் உட்புறம் வரை நீட்டிப்பு செய்து, தண்ணீர் வசதி செய்வதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.430-2/2020/இ1

**தீர்மானம் எண்.2256 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட சாம்பசிவபுரம் பகுதியில் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் கிடைக்கப்பெறாத காரணத்தால், குடிநீர் குழாயில் பழுது உள்ளதை கண்டறியும் பொருட்டு, பல இடங்களில் தோண்டி பார்க்கப்பட்டது. ஆனால் குழாயில் பழுது ஏற்பட்ட இடத்தை கண்டுப்பிடிக்க இயலவில்லை. மேலும் மேற்படி பகுதியில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட நிலையில், தற்போது குடிநீர் குழாய் இணைப்புகள் அதிகமாக உள்ளதாலும், பழைய குடிநீர் குழாய் குடியிருப்பு பகுதிக்குள் செல்வதாலும் பழுதினை சரி செய்ய முடியாமல் உள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, துறைமுகம் பாலம் அருகில் உள்ள Check post முதல் மரமடி வரை புதிதாக 90mm PVC pipe line அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.463/2020/இ1

**தீர்மானம் எண்.2257 அங்கீகரிக்கப்பட்டது**

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி